දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/06-05/03/2015

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2024.07.

பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 04/2020(I)

அமைச்சு செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

<u>உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரைத் தேசிய சேவையின் நேரொத்த பதவியொன்றுக்கு உள்ளீர்ப்பு செய்தல்</u>

மேற்குறித்த விடயம் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2020.01.30 ஆம் திகதிய மற்றும் 04/Æ2020 ஆம் இலக்க சுற்றறிக்கையினதும் மற்றும் 2024.02.27 ஆம் திகதிய மற்றும் 01/Æ2024 ஆம் இலக்க சுற்றறிக்கைக் கடிதத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்புடைய அதிகாரிகளினால் அதுவரை எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கோ அல்லது நடவடிக்கைகளுக்கோ பாதிப்பு ஏற்படாத வகையில், இந்தச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து மேற்குறித்த சுற்றறிக்கை மற்றும் சுற்றறிக்கைக் கடிதம் இரத்துச் செய்யப்படுகின்றன.

02. தேசிய சேவையின் பதவியொன்றிற்கு நேரொத்த மாகாண அரச சேவையின் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் தாதியர் சேவையின், மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் சேவையின், துணை மருத்துவ சேவையின் மற்றும் ஆசிரிய சேவையின் உத்தியோகத்தர் ஒருவர், பின்வரும் i தொடக்கம் viii வரையான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வாராயின், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரம் கையளிக்கப்பட்ட ஏற்புடைய நியமிப்புச் செய்யும் அதிகாரி குறித்த உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் அவரை தேசிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யலாம்.

i. உத்தியோகத்தர் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையின் Z பெறுமானத்தின் அடிப்படையில் அல்லது பட்டதாரியெனில், நாடளாவிய திறந்த போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஏற்புடைய வரிசை அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மாகாண அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. மாகாண அரச சேவையில் வகிக்கும் பதவியை வகிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆரம்பப் பயிற்சியை ஏற்புடைய வரிசை அமைச்சின் கீழ் பெற்றிருத்தல் வேண்டும்.

iii. தேசிய சேவையின் நேரொத்த சேவைப் பிரமாணக்குறிப்பின்/Æஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளுக்குச் சமனான ஏற்பாடுகள் உள்ளடங்கிய மாகாண அரச சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பினால்/Æஆட்சேர்ப்பு நடைமுறையினால் கட்டுப்படுத்தப்படும் பதவியை வகித்தல் வேண்டும்.

iv. மாகாண அரச சேவையின் ஏற்புடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

v. உத்தியோகத்தர் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்பட்டிருத்தலாகாது என்பதுடன், ஏற்புடைய மாகாண அதிகாரிகளினால் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருத்தலாகாது.

vi. மாகாண அரச சேவையின் சேவைக்கு அமைவாக உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருத்தலாகாது.

vii. உத்தியோகத்தரை மாகாண அரச சேவையிலிருந்து நிரந்தரமாக விடுவிப்பதற்கு ஏற்புடைய மாகாண நியமிப்புச் செய்யும் அதிகாரியின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். உத்தியோகத்தர் ஒருவரை மாகாண அரச சேவையிலிருந்து விடுவிப்பதற்குரிய விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்புடைய மாகாண அதிகாரிகள் தீர்மானித்தல் வேண்டும்.

viii. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு தேசிய சேவையின் பதவியைத் தான் பொறுப்பேற்பதாக மற்றும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு உடன்படுவதாக சத்தியப் பிரமாணமொன்றை தேசிய சேவையின் ஏற்புடைய நியமிப்புச் செய்யும் அதிகாரிக்கு உத்தியோகத்தர் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய சேவையின் பதவியொன்றிற்கு உள்ளீர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தரின் சேவைமூப்பினை, உத்தியோகத்தர் மாகாண அரச சேவையின் பதவிக்கு நியமிக்கப்பட்ட தினத்தன்று தேசிய சேவையின் ஏற்புடைய பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதி தீர்மானித்தல் வேண்டும். எனினும், பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர, இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர், சேவைமூப்பு அளவுகோலாகக் கொள்ளப்படும் தெரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பதவியுயர்விற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் கழியும் வரை தகைமை பெற மாட்டார்.

i. பதவியுயர்விற்காகத் தகைமைகளைப் பூர்த்தி செய்த போதிய எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்திராத சந்தர்ப்பத்தில்

ii. மாகாண அரச சேவையில் முன்னர் பதவி வகித்துக் கொண்டிருந்த போதிலும் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறும் பதவியுயர்வுகள்

04. மாகாண அரச சேவையிலிருந்து தேசிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ஏற்புடைய நியமிப்புச் செய்யும் அதிகாரிகள் பரஸ்பர இணக்கப்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தேசிய சேவையின் ஏற்புடைய நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் புதிய நியமனத்தைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய பதவிக்கு உள்ளீர்ப்பு செய்யும் கடிதமொன்று வழங்கப்படல் வேண்டும். இதன் பொருட்டு நியமிப்புச் செய்யும் அதிகாரிகள் பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 3 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள மாதிரி நியமனக் கடிதத்தைத் தேவையான மாற்றங்களுடன் பயன்படுத்தல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையானது 2024.07.24 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு